திருச்சிற்றம்பலம் அருள்மிகு புராதனவனேஸ்வர சுவாமி திருக்கோவில், பட்டுக்கோட்டை வட்டம் பால்கனி அருள்மிகு துர்கையம்மன் ஆலய செயல் அலுவலர் நிலை- 3-ன் நிர்வாகத்தில் உள்ளது. 1405-பசலி ஆண்டுக்கான உதவித்தொகை நிர்ணய வருமானம் ரூ.63,278 ஆகும். மேற்படி திருக்கோவில் திருப்பணிக்கான மதிப்பீடு ரூபாய் பதினோரு லட்சத்திற்கு ஆணையர் நடவடிக்கை ந.க.13569/92, ஒய்-1, நாள் 16-10-95-ல் கீழ்குறிப்பிட்டபடி நிதியொதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி விவரம்- அரசு மானியம் ரூபாய் 4 லட்சம், பொதுநல நிதி ரூ. 4 லட்சம், பொதுமக்கள் நன்கொடை ரூ. 3 லட்சம், ஆக கூடுதல் 11 லட்சம். மேற்படி திருக்கோவிலின் முன்மண்டபம் பாழடைந்து இடிந்துள்ளதைப் புதுப்பிக்கவும், மண்டபங்களில் ஆர்.சி.சி. மேற்கூரை அமைத்தல், கோபுரம் மற்றும் விமானம் பழுது பார்த்தல், பொது மராமத்து, மேற்கு திருமாளிகைத் திருப்பணி மற்றும் மின் இணைப்பு ஆகிய பணிகளுக்காக நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிதிப் பங்கீட்டுத் தொகைகள் வழங்கிட அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. விரைவில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 83, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

83—

முதியோர் ஒய்வூதியத்தை உயர்த்துதல்

***671—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதியோர் பென்ஷன் எத்தனை பேருக்கு, எவ்வளவு ரூபாய் வழங்கப்படுகிறது?

(ஆ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது முதியோர் உதவித் தொகை 8,80,985 பேருக்கு மாதம் ரூ. 100/- வீதம் வழங்கப்படுகிறது.

1996 ஆகஸ்டு 5]

(ஆ) இல்லை.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசிகள் உயர்ந்துகொண்டே இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், ரூ. 100/- போதுமானதாக இல்லை. பகுத்தறிவு ரீதியாகச் சிந்தித்தாலும் அது பொருத்தமானதாக இல்லை. எனவே, இன்றைய தேவைகளை உணர்ந்து குறைந்தபட்சம் 500 ரூபாயாவது உதவித் தொகை வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம் 1962-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1979-ஆம் ஆண்டு வரை மாதத்திற்கு 20/- ரூபாய் முதியோர்கள் உதவித்தொகை பெற்று வந்தார்கள். 1979-லிருந்து 1982 வரை அந்தத் தொகை 25 ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1982-ஆம் ஆண்டு முதல் 1989 வரை அது 35 ரூபாயாக இருந்தது. அதன் பிறகு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்னர், அது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதன் பின்னர் 1-2-1992-ஆம் நாள் முதல் 75 ரூபாயாக உயர்த்தப்பட்டது. மீண்டும் கலைஞர் ஆட்சிக்குப் பிறகு 75 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தப்பட்டு 1-7-1995 முதல் வழங்கப்பட்டு வருகின்றது. நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அது பரிசீலனைக்கு உரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவித் தொகை தொடர்ந்து உயர்த்தப்பட்டது பற்றிய விஷயங்களை விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் உதவித் தொகை ஏற்றப்பட்டது பற்றிய பட்டியலிடுகிற அதே நேரத்தில், ஏறிய விலைவாசியையும் இணைத்துப் பட்டியலிட்டுப் பார்த்தால் உயர்த்தப்பட்ட தொகையினுடைய மதிப்பு செல்லரிக்கப்பட்டதாக இருக்கும் என்பதை உணர்ந்து மீண்டும் மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிவதோடு, மனு செய்தவர்களில் பலபேர் அந்தத் தொகை கிடைப்பதற்குள் இறந்துவிடுகிறார்கள். எனவே, மனு செய்த அனைவருக்குமே உதவித் தொகை கிடைக்கும் என்பதை உரிய துறைகளுக்கு அரசு ஆணை மூலம் தெரியப்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் வருடத்திற்கு இவ்வளவு பேருக்குத்தான் வழங்கப்படும் என்று உச்ச வரம்பு இருந்தது. கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகுதான் அந்த உச்ச வரம்பு தளர்த்தப்பட்டது. அதன் பிறகு கேட்கின்ற அனைவருக்குமே தகுதி அடிப்படையில் முதியோர் உதவித் தொகை வழங்கப்படும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால நிர்ணயம் செய்யப்பட்டு உதவித் தொகை உடனடியாக வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே ஏறத்தாழ 100 பேர், கடந்த 4, 5 ஆண்டுகளாக விண்ணப்பித்திருந்தும் இன்னமும் அவர்களுக்கு தொகை கிடைக்கவில்லை. எனவே, அவர்களுக்கும் விரைவில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கடந்த 4, 5 ஆண்டுக்காலமாக கிடப்பிலே இருப்பதாகச் சொன்னார். அது கடந்த கால அரசினுடைய செயல் நடவடிக்கை. இந்த அரசு உரிய முயற்சிகளை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் அனைவருக்கும் தகுதி அடிப்படையில் உதவித் தொகை வழங்க உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரை மாண்புமிகு உறுப்பினர்கள் அச்சுறுத்தக் கூடாது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் பென்ஷன் யாருக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால், ஆண் வாரிசு இல்லாதவர்களுக்கு மட்டுமே கொடுக்கிறோம். ஆனால் இன்றைக்கு நாட்டிலுள்ள கொடுமை என்னவென்றால், ஆண் வாரிசு இருந்தும்கூட 60, 70, 80 வயதான தாய்-தந்தையரை இந்த ஆண் மக்கள் வீட்டில் வைத்துக் கொள்ளாமல் வெளியே இழுத்து எறிந்துவிடுகிறார்கள். இதுபோன்ற நிலைமைகள்

1996 ஆகஸ்டு 5]

பல இருக்கின்றன. எனவே, ஆண் மக்கள் இருக்கிறார்களா இல்லையா என்று பார்க்காமல், ஆண் மக்கள் இருந்தாலும் அந்த முதியோர்களையும் அநாதைகளாகக் கருதி, அவர்களுக்கும் யாரும் இல்லை என்ற அடிப்படையில் பென்ஷன் வழங்கத் திட்டம் வகுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது, 1-7-95 முதல் மீண்டும் கலைஞர் ஆட்சிக்குப் பின்னர் 100 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்கிற ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் ஆட்சிக்குப் பின்னால் என்றுதான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 84, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. அழகிரி மற்றும் திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்.

84—

ஆதிதிராவிடர்களுக்கு விட்டுமனைப் பட்டா வழங்குதல்.

* *348*—**திரு. ச. அழகிரி :**

திரு. சி. சுப்பிரமணி (என்கிற) சி.சு.மணி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—